# கண்ணகிவழக்குரையில் மனிதநேயப் பாத்திரங்கள் குறித்த ஓர் ஆய்வு

த. மேகராசா[1*]

சிலப்பதிகாரக்கதையினை அடிப்படையாகக் கொண்டு ஈழத்திலும், கேரளா, தமிழகம் உள்ளிட்ட இடங்களிலும் கண்ணகியை முதன்மைப்படுத்தி இலக்கியங்கள் எழுந்துள்ளன. அவற்றுள் மட்டக்களபபுப் பிரதேசத்தில் கண்ணகிவழக்குரை என்றும் வன்னிப் பகுதியில் சிலம்பு கூறல் என்றும் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கோவலனார் கதை என்றும் வழங்குகின்ற இலக்கியங்கள் கவனிக்கப்படவேண்டியனவாகும். ஈழத்து இலக்கியங்களுள் கண்ணகிவழக்குரை பழமையானதாகவும் மனிதநேயப் பாத்திரங்களைக் கொண்டதாகவும் வாய்மொழி இலக்கியக் கூறுகள் பொதிந்ததாகவும் அமைந்துள்ளது. பகுப்பாய்வு மற்றும் விவரண ஆய்வு முறையியல்களின் அடிப்படையில் இந்நூலில் காணப்படும் மனிதநேயப் பாத்திரங்களை முதன்மைப்படுத்தி அப்பாத்திரங்களின் மனிதநேயப் பண்புகளை எடுத்துக் கூறுவதையும் மனிதநேயப் பண்புகள் கொண்ட ஆரம்ப கால இலக்கியமாக கண்ணகி வழக்குரையினை எடுத்துக் கூறுவதையும் இவ்வாய்வு நோக்கங்களாகக் கொண்டுள்ளது. கண்ணகிவழக்குரையில் கண்ணகி, கோவலன் முதலான பாத்திரங்களைத் தவிர ஏனைய பாத்திரங்கள் துணைநிலைப் பாத்திரங்களாகவே அமைந்துள்ளன. இவ்வாய்வில் துணைநிலைப் பாத்திரங்களாக உள்ள இடைச்சியம்மை, மாதரி, மாலயன், வயந்தமாலை, மருத்துவிச்சி முதலான பாத்திரங்களே மனிதநேயப் பாத்திரங்களாக எடுத்துக் கூறப்படுகின்றன. கோவலனும் கண்ணகியும் மதுரைக்குச் சென்றபோது அவர்களை அன்போடு அழைத்து உறவு முறைகூறி, விருந்தளித்து, துயரில் பங்கெடுத்துக்கொள்கின்ற பாத்திரமாக இடைச்சியம்மை என்ற பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. மாதரி என்ற பாத்திரமும் கண்ணகிக்கு உணவு சமைப்பதற்குரிய மரக்கறிகள் உள்ளிட்ட பொருட்களைக் கொடுத்து உதவி செய்கின்ற பாத்திரமாகக் காணப்படுகின்றது. குற்றமிழைத்தவர்களை அரசனின் கட்டளையை ஏற்று மழுவால் பிளக்கும் தொழிலைச் செய்கின்ற பாத்திரமாகப் படைக்கப்பட்டுள்ள மாலயன், கோவலன் குற்றமற்றவன் என்று அறிந்தவுடன் பழிக்குப் பயந்து, அவனைக் கொல்லாது தப்பித்துச் செல்லுமாறு கூறுகின்றான். இது மாலயனிடமுள்ள உயரிய மாண்பினைப் புலப்படுத்துகின்றது. கணிகையர் குலத்தவளாக இருந்தபோதிலும் கோவலனே தனது அன்புக்குரிய கணவன் என்று வாழ்ந்த மாதவி அவன் தன்னை விட்டுப் பிரிந்துபோனபோது மிகுந்த துயரமுற்று வாடியபோது கோவலனிடம் தூது செல்லும் பாத்திரமாக வயந்தமாலை என்ற பாத்திரம் வருகின்றது. பாரம்பரிய மருத்துவத்துறையின்

[1]கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.
megarajaht@yahoo.com

அடையாளமாக மருத்துவிச்சி என்ற பாத்திரம் இடம்பெறுவதுடன் கோவலன் பிறக்கின்ற சமயத்தில் கோவலனின் தாய்க்கு அன்புகாட்டி, வைத்தியம் செய்கின்ற மனிதநேயத் தன்மையுடைய பாத்திரமாகக் காட்டப்பட்டுள்ளது. இத்தகைய பாத்திரங்களை முதன்மைப்படுத்தியதாக இவ்வாய்வு அமைதனூடாக கண்ணகிவழக்குரையினை மனிதநேயமுள்ள காப்பியமாக முன்னிறுத்துகின்றது.

*திறவுச்சொற்கள்: மனிதநேயம், மனிதநேயப்பாத்திரங்கள்*